"வீணைப்சுழலுமெனக் கொருருவான விழியளித்துக்
கோணைகத்துள்ளொருகூத்தப்பிரானுண்டக்கூத்தப்பிரான்
ஆணுவதுமன்றுபெண்ணுவதுமன்றவியுமன்று
காணைக்கண்கொண்டினிக் காணியென்றுன்கச்சியேகம்ப
[னே"—என்,

"ஆணுவவியோ வரிணையோ வென்றிருவர்
காணைக்கடவுள்"—எனவும் வரும். (ஊ)

ஆனால் அந்தச்சிவன் எங்கேயிருப்பார்? கயிலாயம், காசி, காஞ்சி முதலிய தானத்திலிருப்பார். நாமருபமானபடியினால் முத்தி என்னமாய் முடியும்? ஆனால் எங்கும்வியாபி, சருவேந்திரியாமி, சருவபரிபூரணன், சருவலோகநாயகன், சருவசாட்சி, ஈஸ்வர சர்வபூதானமென்னும்வசனத்தால், சிவனெங்குமிருப்பதே சித்தாந்தமாயினும் பசுவுக்குப்பால், கால் கொம்பு, சரீரமெங்கும் இருந்தாலும் கன்னியத்தின்

வெளிப்படுமாறுபோலக் கயிலைமுதலிய தானங்களிலேயும், சிவக்கி யானிகள் சித்தத்திலேயும், வெளிப்படுவர். இதற்கு வசனம் உண்டோ உண்டு, எப்படி ?

"ணைபங்கணேற்றினர் திங்கள்சூடுவர்
பட்டினத்துப் பல்லவனீச்சரத்
தெங்குமாயிருப்பா ரிவர்கன்மையறிவாரார்"—என்பும்,

"சிவனறிக்குருவுருவள் சீவராசியை
சிவன்றனையறிந்திடாச் சீவராசிகள்
சிவனிலாவிடமிலைச் செடசித்தெங்கணுற்ற
சிவனிலாவிடுலுயிர் செகமற்றில்லையே"—என்பும்,

"வானத்கா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
ரூனத்கா னென்பாருக் காமென்க-ரூனத்கால் [கா
முன்னருந்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்
னென்னெருந் சத்கா னென்பன் யான்"—என்பும்,

"விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன்
மறையதின்றுளன் மாமணிச்சோதியா
னுறவுகொண்டெடு னுணர்வுக்கயிற்றினென்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே"—னனவும் வரும். (சு)

ஆனால் அந்தச்சிவனுக்கு எண்குணமுண்டென்றல், ஒருகுண மும் இல்லாதவர் என்று வசனம் உண்டாயிருப்பானேன் ? இல்லையென் பது பஞ்சகிருத்தியங் கடந்தவிடத்தில். ஆனால், எண்குணத்துக்கும் வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"தன்வயத்தவன் றூயவுடம்பினன்
ரூனியற்கை யுணர்வினனுருதல்
பன்னுமுற்ற வுணர்தலியல்பினன்
பாசநீக்குதல் பேரருளாகுதல்
மன்னுமீறில வாற்றலுடைமையும்
வரம்பிலின்பமு மாஇயவெண்குணன்
மின்னெதாகச்சை வாகமமோதுமெம்
மீசன்ரூலை யெப்போதும்வனைக்குவாம்"—னனவும் வரும். (ஈ)

எல்லாஞ் சிவன்வசமாமோ ? என்னில், திரிபுரவிசயம் பண்ணுங்காலைச் சருவமுந்தன்வசமாய்த் தான்மீதியாய் நின்றபடியினுலும், ஆலபோசனஞ் செய்தபடியினுலும், உயிர்க்குயிராய் நின்று தொண்ணூற்றாறு கருவிகளையுமியற்றுதலாலும்,

"சருவதத்துவாதிபதியே சிவாயநமஃ"—என்று, வசனம் இருத்தலாலும், தன்வயத்தனென்னும் குணத்தகும். இதற்கு வசனம் உண்டோ ? உண்டு, எப்படி ?

"அவனைசந்திடி லொருவனுவைசந்தி
மவனைசயாவிடி லனுவைசந்திடா
சிவன்சத்தியோ டறிம்செகம்விரிந்திருந்
சிவன்றனித்திடில் விரிசெகமொடுங்குமால்"—எனவும் வரும். (சு)

தூயவுடம்பினன் என்றது எவ்வாற்றால் வந்தது ? ஒருகருப்பாசயங்களிற் படாமையாலும், கனா, நினா, மூப்புமுதலிய இல்லாமையாலும், சர்வமும் அழிந்தும் தானழியாமையாலும், சிவன்நிர்மலதேகி என்று வேதமுறையிடுதலாலுமாம். இதற்குவசனமுண்டோ?உண்டு, எப்படி ?

"யோனிவழி யேயுதித்து யோனிவழி யேநினைந்து
யோனிவழி யேயொடுங்கு மூமர்காள்-யோனிவழி
வாரா வொருவனையே வந்திக்கால் யோனிவழி
வாரா வகையருளு வான்"—எனவும் வரும். (எ)

சிவன் இயற்கையுணர்வினன் என்பது எவ்வாறு ? எனில், தெட்சணமூர்த்தியாய்ச் சருவதேவர் மூனிவர்கணங்களுக்கு மௌனதேசியாநின்றபடியினுலும், தாருவதாரத்திலே விஷ்ணுவுக்கு ஐந்து நிக்கிரகமும், ஐந்து அநுக்கிரகமும் பண்ணினபடியினுலும், சிவசத்தியாய்நின்று உயிர்களின் அஞ்ஞானமங்களை அறிந்து ஊட்டிவிக்கையினுலும், எல்லாம் அறிந்துவேதமோதினைவித்தலினுலும், சூரியனைப்போல இயற்கையுணர்வுதகும். இதற்குவசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"அறிவிக்கக்குரவரில்லை யன்னையும்பிதாவுமில்லை
யறிவிக்கவையலொன்றில்லை யம்பலத்தாடியென்று
மறிவிக்குமம்மானேயென் றயனரிமுனிவரொல்லாஞ்
செறிவுடையடியனமைசெய்வார் திருப்புலிவனத்துளானே"—
எனவும் வரும். (ஏ)

சிவனுக்கு முற்றுணர்தல்வருமாறு எங்ஙனம்? என்னில், அண்ட ரண்ட பிரமாண்டங்கள்தோறுமுள்ள உயிர்களுக்குக் கன்ம, கரண, புவன, போகங்கொகுக்கையாலும், சிவதத்துவம், வித்யாதத்துவம், ஆத்மதத்துவமாக மூப்பத்தாறுதத்துவங்கள்தோறும் நின்று அறிவிக் கையாலும், அளவிறந்த கண்களுக்குள்ள செய்தியெல்லா மங்ஙங்கே போயறியாமல், எகமாய்நின்றறிகிற சூரியனைப்போல, முற்றுமுணர் வன். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"எங்கஞறுமிருக்கையாலு மிருவினையருத்தலாலுற்ற
செங்கதிர்மதியமீனங் தேய்ந்திடாநிற்கையாலுற்ற
சங்கையொன்றின்றியெல்லாந் தானறிந்திருதலாலுற்ற
செங்கண்மாற்குதிகழீயே திருப்புலிவனத்துளானே"-எ-ம்,

"எங்குஞ்செவியுடையா யடியேற்கிரங்காயே"—எனவும் வரும். (கூ)

சிவனே பாசமோசகனென்றால் மற்றத்தேவதைகளுக்கு அடாதோ? என்னில், எவ்வழியாலும் அடாது. இராஜாவின்கண்ணுக்கும் வழியக்காரன்கண்ணுக்கும், சூரியனிருவோத்துரப்பதுபோலச் சிவ ராசிகள், மனிதர், தேவர்முதலியகண்ணுக்குச் சிவாதிக்கனை யன்றிப் பாசநீங்காது; ஆகையால், அநுக்கிரககாலத்தில் சிவனைமுன்னிட் டறிவிப்பன். தேவர்களுக்கு அநுக்கிரகம்பண்ணவர்யார்? தேவேந்திர னுக்கு அநுக்கிரகம்பண்ணவர்யார்? பிரமனுக்கு அநுக்கிரகம்பண்ண வர்யார்? விட்டுணுவுக்கு அநுக்கிரகம்பண்ணவர்யார்? உருத்திரமூர்த்தி க்கு அநுக்கிரகம்பண்ணவர்யார்? ஆகையாலெல்லாவநுக்கிரகங்களும் சிவனேயென்றறி. ஒருகுழந்தைக்கு ஒருகுழந்தை, இதுதீது இது நன்மையென்று சொல்லுவதுந்தாயாநுக்கிரகமெனக்கொள்க. இதற் கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"பண்டொருகாலங்தன்னிற் படைத்தசெயற்கருளிச்செய்தா
னன்றொன்றேகன்வழிபட்டேத்த வநுக்கிரகங்கள்செய்தான்
முன்றடுகன்றிருமால்போற்ற முத்திமோக்கங்கொடுத்தான்
முன்றிறற்படைவிடுசித்த திருப்புலிவனத்துளானே"—எ-ம்,

"ஆவுக்கும்படைவிக்குமுன்ன மநுக்கிரகங்கள்செய்தா
னாவிக்கும்வலியதனுக்கு நானைக்குமருளிச்செய்தான்
மூவர்க்குமுனிவர்கட்கு முதுக்குறையறிருருக்கும்
தேவர்க்குமூத்தியம்தான் திருப்புலிவனத்துளானே"—
எனவும் வரும். (கo)

சிவன் அருளோடு கலத்தலால் அவர் மகா காருண்ணியரோ யென்றால், அஃதெவ்வாற்றால் ? வருமாறு, பன்றிக்கு இரங்கிப் பால்கொடுத்தமையாலும், ஆனைக்கிரங்கி யிரையேயேவினபடியாலும், சர்வசிவதயாபரரானபடியாலும், காருண்ணியனென்பதற் கடையாளமாய் அத்தகாரியாதிகையாலும், இரக்கமெல்லாஞ் சிவகுணமேயாம். ஈயாமை, இரங்காமையெல்லாம் மலகுணமேயாம். இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"பனைவடிவீசற்கான படியிரைம்பன்றிக்கன்றுக்
கருண்முலைகொடுத்தான்பின்னு மானைக்காயரிணையவிட்டா
குருவடிவாகிக்கல்லால் குறுகிணைதலாலே [ன்
கெரியருண்மூர்த்திபோலுந் திருப்புலிவனத்துளானே"—
எனவும் வரும். (கக)

சிவனுக்கு முடிவிலாற்றலுடைமை எங்ஙனம் ? என்னில், இராவணனைச்சிறுவிரலால் ஊன்றியபடியாலும், விட்டுணு மேகமாய்த்தாங்கிப்பொறுக்கமாட்டாமல் வெட்கிப்போனபடியாலும், ஒன்றுதொட்டு மேகவாகன கர்ப்பமானபடியாலும், ஊழிகாலையில், சங்காரகர்த்தாவாய்ச் சர்வத்தையுந் தகிக்கிறபடியாலும், பூமியைக் சேடன், சேடனைக்கூர்மங், கூர்மத்தைக் காலாக்கினி ருத்திரராய்த் தாங்குகிறபடியாலும், அளவிறந்த பலமுடையாவென்பதற்கு ஐயப்பாடுண்டோ ? இல்லை. இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"அரக்கனைமிதித்தலாலு மரிவெட்கிப்போனதாலு
மூருக்கனலாகியண்டம் யாவையுமொருக்கலாலுந்
சுருக்கமிற்புவியைத்தாங்கித் தாலமாயிருத்தலாலுந்
செருக்களவாற்றலுள்ளான் திருப்புலிவனத்துளானே"—
எனவும் வரும், (கஉ)

சிவனுக்குவரம்பி லின்பமுடைமைவந்து விளங்காட்டுமென்னில், சுக்சுரன் இன்பமயனேயாம். எங்ஙனமென்னில், வேதம், வேத்தியம், ஆத்மா, அனாத்மா, திருக்கு, நிரிசியம், இவற்றையறியாமற் சச்சிதானந்தமானபடியாலும், ஞாதுரு ஞான ஞேயங்களுக்கப்பாற் பட்டிருக்கிறபடியாலும், இன்பமெல்லாம் விஞ்ஞதிறபூமியானபடியால் சம்பு என்ற நாமம்வந்தமையாலும்,

"சட்டோதினைக்கமனத்தழுதாற்சங்கரனே"—
என்றமையாலும்,

"நினைத்தேகாலுங்காண்டோறும் பேசுந்தோறெப்போது
மனைத்தெலும்புண்ணெக வானந்தத்தேன்சொரியும்"—

என்றமையாலும்,

முடிவில் இன்பனென்பதற்கையமே இல்லை.—அரிகரப்பிரமாதி, நாரதாதியிருடிகள், முனிகள், மனிதர், தேவர்கள், சர்வர்களுந்தியானிக்கிறபடியினல், சிவன் இன்பமயனேயாம். இன்பங்கொடுக்கிறவர், சிவனென்பதே வேதாகமசித்தாந்தம். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"எல்லா வுயிர்கட்கு மின்பங்கொ டுத்தலினல்
எல்லாரு சிவனேயே யென்னலால்-எல்லாரு
சிவனுருவே யாமாறு நெவிட்டாத வின்பமுற்
சிவன்பா லிருக்குமெனத் தேர்"—என்பும்,

"இன்பத்துளின்பமாய் நின்னடியையுந்துவன்னாய்
துன்பத்துட்டுன்பநீக்கித் துறவிகடேங்கிநிற்பார்
பொன்பதுமத்தேதான்மாயன் புன்னெரியதுவங்கணைப்பார்
செம்பதுமத்தாள்காட்டாய் திருப்புலிவனத்துளானே"—

எனவும் வரும். (கஉ)

ஆனல் இச்சிவன் எங்கேயிருப்பார்? எங்கும் இருப்பதொன்று முன்னமே சொன்தேனுமே. எங்கும் இருந்தால் எனக்குத் தெரியவில்லையே? எங்கும் இருப்பவர்; நின் அறிவிலேயும் இருப்பர். எந்த அறிவிலே? சுட்டறிவுகெட்ட சுகாதித அறிவிலே. அந்த அறிவுவேறு நான் வேறே? அந்தவறிவே நீதான். அந்த அறிவே நானுயிருந்தால் எனக்குத்தெரியாதோ? வெகுமுகமானபடியினல் தெரியாது. அகமுகமானல் தெரியுமோ? அகமாய்ப்பார்த்துப் பின்டு கேள். ஆனல், அந்த அறிவுவேறுதாறே? அனுபவித்தால்தெரியும். அனுபவித்தவர் உண்டோடா? உண்டு, அவர்கள்யார்? சுகர், வாமதேவர், திருமூலர், நந்தி, சிவவாக்கியர், அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சடகோபர், பட்டினத்தார், பத்திரகிரி முதலியமகத்துக்கள் எல்லாம் அனுபவித்தவர்கள்; தின்றபண்டந் தீர்க்கிட்டாற்போல, அவர்கள் வாக்கியங்கள்காட்டும். இதற்கு வசனமுண்டோடா? உண்டு, எப்படி?

"சுகன் வாமதேவன் றுருவா சன்காதி
மகன்னந்தி தான் வெண்காடன் மாறன்-சகமாண்ட

பத்திரகிரி வான்றீகி பற்றற்றே முத்தியினை
யும்ரு ருறுக்கிவ ரொப்பார்''—என்.ம்,
''சிவனோ ரான் சிங்கையுட்கண்டவா றே''—என்.ம்,
''தேடிக்கண்டுகொண்டேன் றிருமாலோடு ரான்முகனும்
தேடியுந்தேடொணாத் தேவனெ யென்னுள்ளே
தேடிக்கண்டுகொண்டேன்''—என்.ம்,
''உள்ளத்திலெளியையக் கண்டதுள்ளமே''—என்.ம்,வருரும்.

அறிவுக்கறிவாய் நிற்கின்றசிவம் எனக்கேகன்தெரியவில்லே? பஞ்ச பாசமறைப்பு. நான் அறிவானால் எனக்கேன்மறைப்பு ? சிற்றறிவா னபடியினலே ; இந்தச்சிற்றறிவுபேரறிவாமோ ? ஆகும். எப்படி ?

''ஓங்காரமான கலைசத்தமுதன்னிரம்
போங்காலை மீசனே யாம்''— என்று,

வசனம் இருக்கிறபடியினலே பேரறிவாம், ஆகிறத்துக்கு எது எத்தலாம் ? மாமிசபிண்டம், மச்திரபிண்டமாய்த் தேகம் இந்திரியம் அந்தக்கரணம் பிராணவாயு இந்தியேழுபாதியும் நீங்கினல்பேரறி வாகி, அச்சிவனைக்காண்பாய். இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

''பிண்டமாமூடனனல்லேன் பிராணவாயுவுமானல்லேன்
கண்டவிந்தியமானல்லேன் கரணமோர்ரான்குமல்லேன்
பண்டையவறிவேமாகனென் றுணர்குருபரு வம்வாய்ப்பின்
வண்டமிறைகொன்னிறுத்தாரான் மலரடிகாணலாமே''—
எனவும் வரும். (கூ)

இரண்டாவது

பாசகண்டனம்.

ஆத்மாக்கள் அளவிறந்தனென்றல் அளவிறந்தகாலம் அளவிறந்த உயிரும் முத்தியடைந்தும் ஒழியாமல் நிற்பானேன் ? இந்த ஆத்மாக்கள்பிறந்த இடந்தெரிந்தால் அந்தச்சங்கை ஒழியும்,

''நினையக்குறினைசெய்வானும்''
''சித்திலாதபோதுசிவனில்லே''—என்னவும்,

திருவாக்காலும், அகமேகமாய்த்தியானசமாதியில் கன்னைப்போக்கித் தானதுவாய் நிற்பின், அந்த நுட்பந் தெரியும். இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"பாவமுமற்றமொத்துப் பக்குவம்பருவமுற்றிங்
காவியைம்புலனேப்பற்ற தகமுகமாகியென்று
மோவியம்போலநின்றங் குனைருனராமைமோக்கிற்
சீவனுஞ்சிவனுமேவுஞ் சிருப்புலிவனைத்துளானே"—
எனவும் வரும். (கசு)

ஆத்மாவிலே சிவன் எப்படியிருப்பர்? பூவும் வாசனையும்போலே இருப்பர். அத்தனை சமீபமாஞல் தெரியாதிருப்பானேன்? விடயவாதனையாலே. விடயமின்றிப்பார்த்தால் தெரியுமோ? உன்னைப்போலே வெகுபேர் பார்த்து,

"கரியன்கொல் செய்யன்கொல் காண்கின்றிலேனே"—
என்று,

அலர்தூற்றினர். ஆனல், காணப்படாதவபொருளோ? அன்று; காணும்வபொருளோ? அன்று; பின்னைத்தான் எவ்வழி? பார்க்கவேண்டுமென்னும் பசையற்றால் அன்னதற்குச் சொல்லுவேன். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"பாசபந்தமேதுவா பாசமுஞ்சேதகமுவா"—என்பம்,

"நினையறிவாயிருந்து நின்மலன்றன்னைநித்தி
மனமுருகுறாலாராய்ந்து பின்னைருமையங்குன்னை
யினைறவனேயெனக்குநாக்குன்ற டில்லையாவனென்றுகேட்க
வனைறவதுநாக்கேயென்ன வகந்தெளியானைப்போலும்"—
[என்பம்,

"வாக்கினன்மனத்தினன் மதிக்கொணாதசோதியைப்
பார்க்கவேறுறுவமென்றலோ பலதினைசகளோதினீர்
நோக்கிலாதநோக்கைநோக்கி நோக்கிநிற்கலில்லிரா
நேக்கிலாதநோக்குவந்து நோக்கநோக்கநோக்குமே"—
எனவும் வரும். (கஎ)

ஆத்மாவுக்குள்ளே சிவமும், சிவத்துக்குள்ளே ஆத்மாவும், சமவாயசம்பந்தமா யிருக்குமென்று ஆகமங்கள் சொல்ல, பஞ்சபாசங்களும் ஆத்மாவை மறைக்குமென்பது எப்படி? என்னின், ஒரு கடத்திலே நீர்விட்டு எரிக்குங்கால், அதிலே ஆகாசம் வியாபகமா யிருந்தும் அந்தத்தீ நீரைச்சுடுமென்றி ஆகாசத்தைச்சுடுமோ; ஆனல், ஆத்மா கண்டிப்போ? அன்று; அகண்டமென்று கண்டால் அந்தச்சங்கை

யில்லை. ஆத்மாவும் அகண்டமும், சிவமும், அகண்டமாஞல்பஞ்சபாசம் பின்னை யாருக்கு? இந்த விவேகமில்லாதவர்களுக்கு. இதற்கு வசன முண்டோ? உண்டு, எப்படி?

"ஒளிந்தேன்பிறவி யுறவென்னுமபாசம்
கழிந்தேன்கடவுளு ரானவனொன்றுனை
னழித்தாங்கினிவரு மாக்கழும்வென்றேடன்
செழுஞ்சாம்பலுடைய சிவனைக்கண்டேனே"—எனவும் வரும். (கஅ)

சிவத்துவக்கு ஒப்பு சூரியன், சிவனுக்கு ஒப்பு படிகமலை, பாசத்துக்கு ஒப்பு பஞ்சவண்ணங்கள். இப்படி அனேகதொடுத்து இன்னை வனையும் சிவம் உன்னவிட்டுப் பிரியவில்லை. இந்த ஆத்மலாபத்தை நான் எப்படி மறந்தேன்? சற்சங்கதி, சன்மார்க்கசந்தி, சிவாகமசம் பாடனம் இல்லாமையால் மறந்தாய். இப்போது குருதரிசனத்தால் எல்லாங் கிடைத்தவதன்றறி. இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"சுத்தப் படிகமுழச்சிச் சூரியனைச் சந்திரக்கா
லெத்தன்மைதக் கத்தன்மை பீசனிலை-யுற்றுற்றுப்
பாரா கவர்க்குப் பலமும் பலபிணியும்
போராது மெற்றுனன்று போம்"—எனவும் வரும் ()

சிவசம்பந்தம் எனக்கெப்படிவந்தது? சிவத்துவம் நீங்கிச் சிவ மெப்படியாவேன்? சிவசம்பந்தம் அறியாமையாலே. சிவசம்பந்தம் அறிவாலே. அந்த அறியாமை எங்கேபிறந்தது? உன்னிடத்திலே. ஆனல், என்னை மறைத்த இருளை யான் அறியாமற்போகவேண்டியது என்னை? இந்த அஞ்ஞானத்தை என்னறக்குக் கடப்பேன்? இந்த மாயையாலே மூடுபட்டேன்! இந்த கர்மம் என்னை விடவில்லையே! என்பதனல் அறிந்தாயோ யில்லையோ. ஆனல் அறிவு எங்கேபிறந்தது? உன்னிடத்திலே. அறியாமையும் அறிவும் ஒருசம்பந்தமாய் இருக்குமோ? இருக்கும். எப்படி? ஒரு கடலிலே விடமும், அமுதமும், பிறந்தாற்போலவும்; ஒருமரத்திலே ஈரமும், வெருப்பும், பிறந்தாற் போலவும்; ஒருகண்ணிலே வெகுமையும், இருளையும், பிறந்தாற்போல வும்; உன்னறிவிலே அறியாமையும், அறிவும், ஒன்முய்ப்பிறந்ததைக் கண்டுகொள்ளுதி. அந்த அறியாமை எதனால் இறந்தது? அறிவு மேலீட்டாலே. அந்த அறிவு எவ்வண்ணம்? நான் எவ்வண்ணம்? அதனை இரண்டாட்ட இடமில்லை. ஆனற்போம்வழியாது? (அறிவுஞ்

சிவனுமொண்ணனு அல்லவென்கிறவன்வாயில் மண்ணனு) என்கிற உல
கவசனமே சாட்சி. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"ஞானவமேலிடவாருயிர் கீழிட்டடங்கிலிற்கு
மானவங்கீழிடவாருயிர் மேலிட்டருளுருவாம்"—என்பும்,

"அறிவென் றறியாத வானவமே ஞானச்
செறிவாய வென்னேநீ தின்டற்க-வறிவாய
வென்னேச் சிவமாக்கி யென்னறிவி லெக்காலும்
பின்னமற நின்றருள் பிரான்"—எனவும் வரும். (உ0)

ஆத்மாவுக்கு அஞ்ஞானியிலே மலசம்பந்தம், சண்டுக்குக் காளிதம் போலும், கடலுக்கு உவர்போலும், நெல்லுக்கு உமிபோலுமான தென்னில், ஆத்மா அறிவென்றால், மறைக்குமோ? சிற்றறிவானபடியி னலேமறைக்கும்; ஒளியைய இருள் மறைக்குமோ? மறைக்கும். சந்திராதித்தர்களை, இராகுகேது மறைக்கிறப்போலும்; நெருப்பை சாம்பல்மறைக்கிறப்போலும்; ஆகாசத்தை, மலைமறைக்கிறப்போலும். ஆனால், இந்தமறைப்புக்தான் வருவானேன்? நீபண்ணகன்மத்தால். நான் அவயவம் இன்றிநிரவயவமா யிருக்கக்கன்மத்தை எப்படிச்செய் தேன்? நிரவயவன் நானென்பதைமறந்து, அவயவம் நானென்னுங் கருத்தாற் கன்மம்வந்தது, அந்தக்கன்மத்தால் மாயையுண்டாச்சு, இந்தமாயையால் சர்வபதார்த்தமும் உண்டாச்சு. இதுபோமாறு? சிற்றறிவாகிய நீ, பேரறிவாய்நின்றருள்பசுபாசம் இல்லை. இதற்குவசன முண்டோ? உண்டு, எப்படி?

"அறிவுருவாயவென்னே யானவடமாதிகூடிட்
டிறிவறியாதநின்னேட் பிறித்துத்தான்முழுதுமாகி
நெறியினேமறைத்துப்பொல்லா நீசருக்கடிமையாகிச்
செறியிருணின்றதென்னே திருப்புலிவனத்துளானே"
—எனவும் வரும். (உக)

சிவமேகுருவாய் வருமென்னில் விரோதஞானமாம்; உங்கள்சிவ னுக்குக் காலுங் கையும் உண்டோ என்னுந் தர்க்கம்வரும்.

"குருவேசிவமெனக் கூறினனெந்தை"—என்று,

வசனம் உண்டாயிருப்பானேன்? ஆனால், சிவனேக்குரவனெனச் சிந்தியேலக்க அவமதியா லாழ்வைநிர்யத்து-என்று வசனம் இருப்பா னேன்? ஆனால், இதற்குவாயில்லை. தினிப்போமாறு? சிவஞானிகளோ

அதிட்டித்துக்கொண்டு அநுக்கிரகம் பண்ணுவர். இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"அறிவுக்கறிவா யறிவிப்பான்சில்லோர்க்
கறிவுருவுகொண் டருளுவான்"—என்பும்,

"ஆட்டுவித்தா லாரொருவராடாதாரே
காட்டுவித்தா லாரொருவர்காணுதாரே
காண்பாராரார்கண்ணுதலாய் காட்டாக்காலே"—எனவும் வரும். (உஉ)

பதிதான், அநாதிபசுவும், பாசமும், அநாதியோ? சூரியன் உள்ளபோதேகண்ணும் அநாதி. கண்ணேமறைத்த இருளும் அநாதி. பதிதான் நித்தியம், பசுவும்பாசமும் நித்தியமோ? ஆதித்தன் உள்ளபோதேகண்ணும், கண்ணேமறைத்த இருளும் நித்தியம். ஒன்றுக்கே நித்தியப்பட்டம் அன்றி மூன்றும்நித்தியமோ? வெண்ணில், சிவனறிவிலே சிவனறிவு கலக்கப்பண்ணிப் பிரபஞ்சத்தை மறைக்கிறபடியிலே, பாசத்தைநித்தியம், அநாதியென்றது. ஆனால், இது தாரியமாச்சுது. தாரியங்கடந்த விடத்திலே ஆகமமும் எனக்கெட்டாதென்று சொல்லும்; வாழையடி வாழையாய் உலகத்தைமறைக்கலால், அநாதியென்றலும் ஆகமத்துக்குவிரோதமில்லை. வேதாந்தம் ஒன்றேயென்று சாதிப்பானேன்? அடியேனுக்கு அதுதெரியவில்லையே? தெரியப்படுத்துமென்றுகேட்கத் தேவையில்லை. வேதம்விரோதஞ்சொல்லுமோ? சொல்லாது. உன்போதம்போலல் எல்லாம் அவிரோதமாம். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"சுடரொளியாமென்றுமுள னென்றளவும்யாதுமுளனெ
ன்றறிவிலையிற்றரித்து நில்லாமல்"—என்பும்,

"பதிபசுபாச மெனப்பகர்மூன்றும்
பதியினைப்போற்பசு பாசமனாதி"—என்பும்,

"அறிவறிவென்ற வறிவுமனாதி
யறிவினைக்கட்டிய பாசமனாதி
யறிவுக்கறிவாம் பதியுமனாதி
யறிவுபதியிற் பிறப்பறுக்காதே"—எனவும்வரும்.

ஆத்மா ஒன்றென்று வேதாந்தஞ்சொல்ல, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென்று அனேகமாக ஆகமஞ்சொல்லுவதேன்? வேதவழிபோனவன் ஆகமவழியிற்போகான்; வடக்கேபோகிறவனைக்

குக் காவேரிமகத்துவந்தெரியுமோ ; வதற்கே போகிறவனுக்குக் கங்கைமகத்துவந் தெரியுமோ ; அப்படிபோல்,

"முத்திபலவும்பகர்ந்தோம் பக்குவத்துக்கீடாய்"—

என்பதைப்பற்றில், சமுசயமாகத்தி. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி ?

"ஒன்றதேதேபலநூர் வழியாறதற்குள்"—என்பம்,

"ஒன்றென்றுசொல்பவர்சொன்னதுந்தெரிந்துசொல்லுகவாரியண்டோ,மென்றென்றுசொல்பவர் சொன்னதுந்தெரிந்துசொல்லுகவேத்தியன்பர், சென்றன்றுங்குருச்சிற்றம்பலநாடிசிவபுரத்தோர், னென்றென்றிதாமென்று சொல்லாதமுத்தியளிக்குனரோனே." ()

வேதம், வைதாந்தம், வைத்தியம், வேதமகாவாக்கியம், வேதாந்தமகாவாக்கியவிசாலம், வேத்தியப்பிரமம்; இப்படி, வேதபண்டிதர்கள் வெகுமுகமாகச்சொல்ல, ஆகமவாக்கியமே பிரதானமென்று மூற் சொல்லிய வேதத்தை நிந்திப்பானேன் ? சத்துவமசி, சித்துவமசிக்கும், அது நீயாதலால், சிவம் நீயாதலால், என அர்த்தம் வகமே ; இதற்கு அத்தாட்சி ; அங்கயற்கண்ணி, மீனாட்சி, இடைச்சி, கோனாட்சி, வெள்ளிமலை, ரசிதமலை, காஞ்சி, கச்சி, காசி, வாரணாசி, வெண்காடு, சுவேதவனம், வேதாரண்ணியம், மறைக்காடு. இதற்கு வசனம் உண்டோ ? உண்டு, எப்படி ?

"அதுவேவீ யாணையென்றமறைகள் சொல்லு
மெதிர்சிவனே நீயாரு யென்னை-முதுநூலும்
வேறேறுவே றன்றேறுசொல் வேதியனே விண்விசும்படும்
வேறேறுவே றன்றேறு விளம்பு"—என்ம,

"தன்னேரிலிடொரு தற்சிவக்கோழியே
பின்னேரில்லுருப் பெற்றியையாடியே
மன்னுமாலையும் காலையுதிபட
வன்னாரில்லுரு வாகுவனுனோயே"—எனவும் வரும் ()

ஆத்துமாவே சிவமென்பது சித்தாந்தமானால், சிவமென்றும், பிரமமென்றும், அரிகரப்பிரமாதிவென்றும் பலவாய் வருவானேன் ? உபாசிகன், உபாசனையால் வேறுவேறுரூபினை. இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி ?

"காவேரியொன்று காஸ்வாய்நூற்றெட்டு
மன்னெண்றுபாண்டம் வரும்பலவாகி
விண்ணெண்று ஆகாயம் வேறுவேறுகு
மாவியுமிவ்வண மாய்ந்துகொள்வீரோ"—என்று,

வசன மிருக்கிறபடியிலேலே சங்கையில்லை. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"என்னகத்துளென்னோ னெங்குமோடிநாடினே
னென்னகத்துளென்னோ னறிந்திலாமையானதா
னென்னகத்துளென்னோ னறிந்துமெய்தெளிந்தபின்
என்னகத்துளென்னையன்றியாதுமொன்றுங்கண்டிலேன்"
—எனவும் வரும். (உசு)

இவன் அறிவு, சிவன் அறிவிலே கலந்தால் மலம், மாயை, எக்காலும் இல்லையா? இல்லை. எப்படியில்லை? மத்தியான சூரியனை அந்தராத்திரி மறைக்குமோ; நீரிலே முழுகினவனை நெருப்புச் சுடுமோ; மச்சுவினக்கை வாயு அலைக்குமோ; அதுபோலாமென்று அறி. ஒருகாலுஞ் சிவன் கலந்ததென்றால், ஒருகாலம் பிரிந்ததுண்டோவென்னு மாற்றம் வருமேயென்னில், குருடனுக்குக் காசத்தடைமாத்திரமேயன்றி, அவன் கண்ணுக்கு பிரகாசம் ஒருகாலம் வரவுபோக்குநாத்தி. ஒளியிருந்தால் மறைப்பு வருவானேன்? அப்பிரகாசமா யிருக்குங் காசம் நீங்கப்பிரகாசிக்குமெனக்கொள்க. இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"குருடர்க்குமுன்னே குடிகொண்டிருந்ததென்
கோலமல்கு"—என்னும்,

"அறிவுங்கரணமும்போ யானந்தபூரணத்தைத்
குருடன்விழியொளிபோற் கூடாமற்கூடினமே"—என்னும் வரும். (உஎ)

உடலுக்கு - மூலம் இந்திரியம்; இந்திரியத்துக்கு - மூலம் பிராணன்; பிராணனுக்கு-மூலம் கரணம்; கரணத்துக்கு-மூலஞ் சிவன்; சிவனுக்கு-மூலஞ் சிவன்; சிவனுக்கு-மூலஞ் சிவனே. இச் சிவனே இவைகளைப் பிரேரிக்கிறபடியிலேலே, சிவன் அல்லாதது எல்லாஞ் சிவன்போலத் தோற்றும்; ஆகையால், எல்லாஞ் சிவம் என்பதும், நானே பரப்பிரமமென்பதும், இக்கருத்தைப்பற்றி வந்தன. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"உடம்பினைச்சிவமேயென்ப ருடம்பிற்குழுலமோராற்
றிடம்படுபிரானன்றுனே கத்தனென்றுணைப்பரஞ்சு
மடம்பெறுமிந்தியத்தை மதியென்பரிவைக்குழுலம்
திடம்படநின்னைக்காணர் திருப்புலிவனத்துளானே"—
(உஅ)

எனவும் வரும்.

தத்துவ மூப்பத்தாறும் ஆத்மாவுக்கு விடயஞானம். இந்தத் தத்துவம் ஆத்மா அல்ல. ஆத்மதத்துவம் அசுத்தமாயை. வித்தியாதத்துவம் ஆத்மா அல்ல. ஆத்மதத்துவம் அசுத்தமாயை. வித்தியாதத்துவம் சுத்தமாயை. சிவதத்துவம் அசுத்தாசுத்தமாயை. ஆத்மதத்துவம் அசுத்தாசுத்தமாயை. சிவதத்துவஞ் சுத்தமாயை. ஆத்மதத்துவம் சுத்தமாயை. வித்தியாதத்துவஞ் சந்திரனைப்போல, வம்சட்சத்திரங்களைப்போல, சிவதத்துவஞ் சூரியனைப்போல, ஒருமாயையிலே மூவிதமாயிருப்பதை ப்படி? அத்தாட்சி, கருப்பஞ்சாற்றிலே வெல்லம், சர்க்கரை, கற்கண்டு உண்டானதற்போலவும்; மண்ணிலே இரும்பு, வெள்ளி, பொன்னுண்டானதற்போலவும்; இப்படிமும்மாயையும் ஒன்றுக்கொன்றுமேலுகாண்க. இந்த மும்மாயையுமே மூப்பாழுமானபடியினல் தத்துவாதீதன் ஆத்மாவென்று வேதஞ்சொல்லும். இந்தத் தத்துவத்தோடே ஆத்மாக் கூடுவானென்? கூடாவிட்டால் பஞ்சகிருத்தியம் இல்லை. பஞ்சகிருத்தியம் இல்லாவிட்டால் என்ன? உன்னைக்கேட்டோ ஈசுரன் பஞ்சகிருத்தியம் பண்ணுவான்; ஈசுராக்கினை அறியப்படாதென்பதே சித்தாந்தம். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"பூதமுங்கரணம் பொறிகளைம்புலனும்
பொருந்தியகுணங்களோர் மூன்று
காதமுங்கடந்தவெளியிலே நீயுகாணுமாய்
நிற்குகா ளுளதேகா"—எனவும் வரும். (உக)

ஆத்மா, சுதந்தரனன். தத்துவஞ் சடம், சடத்தையுஞ் சித்தையுங் கூட்டிவைக்கிறவர் சிவன். இந்தச் சிவன், என் சடசித்தைப் படைத்தார்? திருவிளையாட்டு. சடமுஞ் சித்துஞ் சிருட்டிக்குமுன்னே, எப்படி யிருக்கும்? பழைய பரமசிவமா யிருக்கும். ஆனல், எல்லாஞ் சிவமென்னலாமோ? அதுக்குச் சந்தேகமில்லை. ஆனல், ஆண்டவன் அடிமையில்லையோ? அனுபவித்துப்பார். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"நன்றுகண்டூரிது நமச்சிவாயப்பழந்
தின்றுகண்டார்க்கது தித்திக்கவாறே"—என்னும்,
"அனுபவத்தறிவதன்றி யளவையாலறியக்கூடாச்
சனகனைச்சாக்கிசொன்னற் சருவருமொப்புக்கொள்வர்

மனமொருபாலேவிட்டின் மலரடிநோக்கும்வஞ்சர்
தினமலரிடுஞ்வேண்டாத் திருப்புலிவனத்துளானே''—
எனவும் வரும். (கூ0)

ஆத்மாவை யெப்படியறியப்படும்? ஆத்மாவே பிடிபடாமற்போ ஞல் சிவம் எப்படிப் பிடிபடும்? சோத்திராதியால் சத்தாதிகளை யறி யப்படுதலாலும், உசுவாசம் நிசுவாசம் வாங்கிவிடுகிற படியினுலும், சுந்திராதித்தர்கள் தோன்றி யொடுங்குகிறபடியினுலும், இதற்கெல் லாம் பிராணதாரியா யிருக்கிறவனே ஆத்மா. இந்த ஆத்மாவைவிடச் சிவமில்லையோ? விலாங்கு சம்பந்தம்போல உண்டு. அதெப்படி?

''ஆமடிகெட்டேனே-பாம்படி
யல்லடிகெட்டேனே விலாங்கடி''—என்பதுபோல.

வெகு முகத்திற் சிவனையும், அகமுகத்திற்சிவனையும் தோற்றும். இந்த வித்தை நானெங்குங் கண்டதில்லையென்னில், வேதாகம வீதி யிலேபோனுற் காணலாம். இதற்கு அத்தாட்சி,

''ஆமடிகெட்டேன்பாம்பீதன்றுகெட்டேன்
விலாங்கென்னுமோ குடியம்போலுமுளன்''—என்ம,

இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

''காதெவனேலேகேட்குங் கண்ணெவனேலேகானு
மோதுநாவெவனேலுண்ணுமுடலெவனேலேயோரு
மோதுமூக்கெவனென்மோக்கு மூச்செவனேலேயோதும்
போதெவனுற்போய்மீளு மவனடிபோற்றுகிற்பாட்''—
எனவும் வரும். (கூக)

எகமோ, துவிதமோ, அத்துவிதமோ, சிவ சிவாகாத்திரியோ, மூத் திரிச்சயார்த்தம் எப்படி? என்னில், எகமென்றுல், ஆண்டவனடிமை என்கிற குணம் வரத்தேவையில்லை. துவிதமென்றுல் அயிக்கமுத்தி கூடாது. கலப்பென்னின், ஒருவீட்டிலிரண்டு பயித்தியக் காரரில்லை யென்பதேயாம். சிவனுமில்லை சிவனுமில்லையென்னில், அனீச்சுரவா தியாய் முடியும். ஆனற் போம்வழி? (நிட்டையிலே நட்டமானேன்) என்னு மகாவாக்கியத்தாற் காண்க. இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

''நீரினைமுழுகிநே னினைறையவுண்டவன்
வாரமிருமதன் போன்றுமாமையன்

நீர்சிவயோகத்திற் நிலைத்திருப்பர்க
ளாரவர்பெருமையை யளக்கற்பாலரே''—என்பும்,

''அண்ணலுழையிரும் வெறணவணர்ந்தா லெயிக்கியமுத்தி கூடாவா, லெண்ணலுழையிரு மென்றனவணர்ந்தா லாண்டவனடிமையின்றாகு, மண்ணலுழையிரு மிரண்டலெவென்றா மன்றனினோயுறவாகு, மண்ணலுழையிரு நாத்திபென்றலைக்கி லெனீச்சுரவாதிகீயாமால்''—எனவும் வரும். (கூஉ)

ஆத்மாசுதந்தரபோதரை? வசுதந்தரபோதரை? எனினில், ஆகமம் முத்தியில் சுதந்தரபோதனென்று சொல்லும். வேதம் பெத்தமுத்தியிரண்டிலுஞ் சுதந்தரபோதனென்று சொல்லுமாலில், சுபாவசித்தாந்த மேதென்னில், அனுபவத்திற் காண்க. மூன் சொன்ன வேதாகமஞ் சொல்லவில்லையோ? எனினில், தற்போதத்தே சிவம் தான் இல்லாமையே யதற் கடையாளமென்றும், அகந்தத்துவா சுத்தபவா வென்றும் சொல்லும். ஆனல், அது தெரிகிறவழி எப்படி? எனினில், உன் சித்தம் சுதந்தியானத்தில் அழுந்திஞல் அன்னறக்குத் தெரியும். தெரிந்தவந்து, உலகர்க்கு உபதேசம் பண்ணக்கடவா மென்னும் ஆசையை விடக்கடவாய். இதற்கு வசன முண்டோ? உண்டு, எப்படி?

''காணுதகாட்சினைக் கேளாதகேள்வினைப்
பூணுதபூணினைப் போற்றுதுகாசே''—என்பும்,

''அனைபவத்தன்றிலேறறியொணு
வினையுடனம்புலியாடவாவே''—என்பும்,

யனுவினுக்கனுவதாய்நின்ற
சோர்மனையயறிக்தம்புலியாடவாவே''—எனவும்வரும்.()

மூன்றுவது

பாசசங்கை.

ஆணவமலத்துக்கு அனேக சத்தியும் சிவனுக்கு இரண்டு சத்தியுமாயின், ஆணவமுயர்ந்து சிவந்தாழுமோ? எனினில், சிவந்தாணையறிகிற சத்தியொன்று, சருவாத்மாக்களுக்கும் அறிவிக்கிற குணசத்தியொன்று. ஆணவத்துக்கு அனந்த சத்தி அனந்தாத்மாக்களை மறைக்கிறபடியினலே, பெருங்குலத்தானென்னும் பேர் புலையனுக்கு வந்த

மையால், அவனுயர்ந்தாரே இல்லை. அதுபோலவா மென்றறி. இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"சிவத்தினுக்கிரண்டுசத்தி திமிரத்துக்கனந்தசத்தி
சிவத்தினுக்குயர்ந்ததென்பர் தெளிவிலாமாந்தரெல்லாஞ்
சிவத்தின்றன்றன்மையெல்லாந் திமிரமேமறைத்தலாலே
சிவத்தினையறிந்தோர்போற்றுந்திருப்புலிவனத்துளானே"

—எனவும் வரும். (கச)

இந்த ஆணவமலம் அருவமோ? உருவமோ? இரண்டுமல்ல. உருவமென்னிற்கண்ணுக்குத் தெரியவேண்டும். அருவமென்னின் மறைக்கமாட்டாது. பின்னதான் போம்வழி? பாசம் உண்டென்று முன் சொன்னதும், ஆசாரியன் இல்லையென்று பின் சொன்னதும், ஆசாரியன். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"அறிவறியாமைதன்னை யன்றுகானறியேனின்றுங்
குறியுறக்காணேனினின்றன் கூத்தாட்டலிருந்தவாறென்னே
மறிமழுக்கரத்தாயுன்றன் மலரடிகாணநோக்கிச்
செறிபலமுனிவர்போற்றுந் திருப்புலிவனத்துளானே"

—எனவும் வரும். (கஎ)

இந்த ஆணவமாதிய பஞ்ச பாசங்களும், நித்தியமென்று சிவாகமஞ் சொல்லுமெனில் கூடாது. எப்படி? ஒரு வேதம் பஞ்சபாசங்களும் அநித்தியமென்று சொல்லிற்று; பின்னொருவேதம் ககனரவிந்தம், வந்தியாடுத்திரன், சசவிஷாணம்போல அனுபவத்திலே பஞ்சபாசமில்லையென்று சொல்லிற்று; நாலாம் வேதம் மாயையேயில்லை, இருக்கிறதெல்லாம் பிரமமேயென்றுசொல்லிற்று; அட்டாவக்கிரகர் தன்முய்வயிற்றிலிருந்துகொண்டதகப்பனைநோக்கி, (எல்லாம் மாயையென்கின்ற வாய் எல்லாம் பிர்ம்மமென்று சொல்லாதோ)—வென்று, திருவுளம் பற்றினபடியாலும், பஞ்சபாசங்களுமில்லையென்பதே சித்தாந்தமென்னில்; உண்டாயிருந்ததென்பதுவதத்திரியும். ஆகையால், இல்லையுண்டென்பதிரண்டும் அனுபவத்திலே தோன்றுமென்பதே சித்தாந்தம். விபகாரத்துக் கொப்பக் காட்டென்னில், அனுபவம் விபகாரத்துக் கெட்டாது. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"இல்லையெனுமாயையி லிட்டனைநீ
பொல்லேனறியாமை பொறுத்திலையே"—எ-ம்வரும்.()

மலம், மாயை, கன்மம், ஒருகுணமோ ? பலகுணமோ ? மலம்-மறைக்கும் ; மாயை-விளக்கும் ; கன்மம்-விகாரப்படுத்தும். மலம் அறிவை மறைக்குமோ? மனத்தைமறைக்குமோ? மனத்தைத்தான் மறைக்கும். அறிவை மறைக்குமென்று வசனமிருப்பானேன் ? மனமும் அறிவின் சம்பந்தமானபடியினல் அங்ஙனஞ் சொல்வாருமுளர் ; செனனமரணப்படுவது மனந்தானே ? ஆத்மாவோ ? ஆத்மாதான். செனனமரணப் படுவதென்றால், அனுபவி யொப்புக்கொள்ளான். செனனம் - கருவியிற்றோய்தல் ; மரணம்-கருவியைநீங்கல் ; நரகம்-ஆயாசம் ; சொர்க்கம்-அநாயாசம். இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ? சுருதிசார முற்றிலுங்காண்க. (கஎ)

இந்தக் கண் நானல்ல ; கண்-சடம் ; நான்-சித்து ; கண்ணைக்கொண்டறிகிறது-மனம் ; மனத்துக்குச்சாட்சி-நான் ; கண்ணும்-விடயமும் - மனமும்-மாயை, நான்-அறிவு, என்பெயர்-ஆத்மா. இதற்கு வசனம் உண்டோ ? உண்டு, எப்படி ?

"கண்ணைவலைலேகாணும்"—என்பம்,

"காளத்தியானவனென் கண்ணுளானே"—என்பவரும்.()

இந்தச் செவி நானல்ல ; செவி-சடம் ; நான்-சித்து ; செவியைக்கொண்டறிகிறது-மனம் ; மனத்துக்குச்சாட்சி-நான் ; செவியும் விடயமும்-மனமும்-தூலம் ; நான் சூக்குமம், என்பெயர் ஆத்மா. இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"காதலைலேகேட்குமே"—என்பம்,

"சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டி"—என்பம் வரும். ()

இந்தத் தொக்கு நானல்ல, இது சடம், நான் சித்து, தொக்கால் பரிசத்தையறிகிறது-மனம், இந்த மனத்துக்குச்சாட்சி-நான், இவையெல்லாமிறந்தாலும் நானிறவாதபடியினலே நான் சின்மாத்திரன். இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"உடலெலைலேயோரும்"—என்பம்,

"உடற்சக்காத்தி னுயிர்ப்பையுங்காட்டி"—என்பம் வரும்.()

இந்த ஆக்கிராணம் நானல்ல, இது சடம், நான் சித்து, ஆக்கிராணத்தைக்கொண்டு கந்தத்தையறிகிறது-மனது, அந்த மனத்துக்குச்சாட்சி-நான், எனக்குச்சாட்சி-சிவம், இந்த சிவம் வேறு நான் வேறல்ல ; ஆக்கிராணமும், கந்தமும்,மனசும் அழிய நானழியாமல்சிவத்தை முன்னிட்டுப் பாசத்தை பின்னிட்டபடியால், நான் சிதானந்தனாயன். இதற்கு வசனம் உண்டோ ? உண்டு, எப்படி ?

"மோதுழுக்கெவனென் மோக்கும்"—எனவும் வரும். ()

இந்தநாக்கு - நானல்ல, நான்-சித்து, நாக்கு-சடம், நாக்கைக் கொண்டு ருசியையறிகிறது-மனம்; இந்த மனத்துக்குச்சாட்சி-நான், எனக்குச்சாட்சி - சிவம், இந்தச் சிஷ்டியையும், ருசியும், மனமும் அழிய நான் அழியாதபடியால் நான் நித்தியானந்தன்.—இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"ஓதுநாவெவனுலுண்ணுமெம்"—எனவும் வரும். (சஉ)

பிராணவாயுவும் நானல்ல, பிராணன்-சடம், நான்-சித்து, பிராணனைக் கொண்டறிகிறது-ஆத்மா, அந்த ஆத்மாவே-நான், இந்தப் பிராணனும், மனதும் அழிய, நான் அழியாதிருக்கிறபடியால், நான் சருவானந்தன். இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"மூச்செவனுலேயோதும்"—எனவும் வரும். (சஊ)

இந்த மனமும் நானல்ல, புத்தியும் நானல்ல, அங்காரமும் நானல்ல, சித்தமும் நானல்ல, அந்தக்கரணம்-ஆத்மாவுக்கு மந்திரி, பிராணன் - பிரதானி, ஆத்மதத்துவம் - தாசிப்பணை, வித்தியாதத்துவம்-சிற்றணி, சிவதத்துவம்-பேரணி, காயமே-அரண்மனை, இப்படி சாகிரமாதி தானமாகிய உத்தியானவனங்களிலே சம்சாரிபோலச் சஞ்சரிப்பன்; ஞானக்கண்ணினுற் பார்க்கிறவர்களுக்குத் தோற்றப்படுவன்; ஊனக்கண்ணினுற் பேரற்றப்படான்; ஆத்மா இன்னனென்று என் தோற்றப்படவில்லை? தோற்றியுங் கன்மத்தால் தோற்றப்படவில்லை; நீயார், என்னில், நான்தான், நீயார் என்னில் யாருமில்லை, என்பவனே ஆத்மா, இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"நானொன்றுளாப்பவனே நாடிலுந்தவான்மாவா
நாநானென்றுணக்குக் கயல்வேறோர்நாக்குண்டோ
நானேநீநீநானென நானைமுனைடியமாணைக்க
நானேவெதப்பொருளை நாட்டுவதற்கையமிலை"—

எனவும் வரும். (சக)

ஆணவம்-இருள், மாயை-விளக்கு, கன்மம்-கருக்கறை வெள்ளியோ-வென்று மயக்கஅறிவு; கண்-ஆத்மா, சூரியன்-சிவம், பகல்-சகலம், இரா-கேவலம்; இப்படி அனுதிதொடுத்து இன்றளவும் வரும். சற்குரு ஞானதீக்கையால் சகலகேவலம்அறும்; அறவே ஞானசூரியன் உதயமாம்; ஆகவே ஆணவவிருள் நாசத்தையடையும்; அடையவே மாயை-விளக்கவியும், அவியவே-ஐயந்திரிபு அறும், அதனால் ஆத்மா சுவானுபவத்தைப்பெறும், பெற்றால் வேறுபடுமே யென்னில், வே

நிலாமையைக்கண்டதே பெற்றதெனக்கொள்க. இருள் சூரியனில் மறைந்தாற்போல, ஆணவம் சிவத்தில் அடங்கும் எனக்கொள்க; இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"சருவக்கியாதேனுத்தரமேயாம்"—எனவும் வரும். (சுநி)

சிவத்தைவிட ஆத்மாவென்று நாமம் வருவானேன்? சிருட்டியால்; ஆனல் சிருட்டிக்குமுன் சிவராசியில்லையோ? இல்லையென்றே வேதஞ்சொல்லும்; வேதாந்தத்துக்கு மேலான ஆகமம், உண்டென்று சொல்லுகின்றதே; அது பூருவகாண்டத்திற் சொல்லும்; உத்தரகாண்டத்தில் வேதஞ் சொன்னபடியே சொல்லும்; இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"சாலமோன்முதலறிவுடையாமுனைவுருவாகிழுவருருவிற், சாலவுமாசிமையங்கலாறினுருவாகி நின்றகழுலோன், முதலழுமேலவின்னேணுருவேதழுமென்முளாயோராவினிலுமேற், பாலனுமாயவற்கோர்பாமாயழுந்தியவணுகமக்கோர்சரனை"

[—என்பும்,

"திக்கேடதூர்வமாத்மா யேகமேவா"—என்பும்,

"சிருட்டிக்குமுன்னையினல்லாற் சிவமென்றுசெப்புமனை
சிருட்டிக்குப்பின்னையிற் சேறபட்டான்சிறுசிவனென்ற
சிருட்டியைமீக்கிச்சிலோகமென் பாலனைச்சாத்தாலுற்
சிருட்டிக்குமுன்சிவமாணன் றிருக்கச்சிலேகம்பனே"—

எனவும் வரும் (சுசு)

ஆனல் ஆத்மசிவத்தை வந்துப்பிரகாரம் அறியவைக்கலாம்? என்னில், வனத்தின் வள்ளிமுதலின் நுனியைப்பற்றி அதன் மூலம்பற்று வானைப்போல, வசனத்தைப்பற்றி-வாக்கு, வாக்கைப்பற்றி-மனது, மனதைப்பற்றி-புத்தி, புத்தியைப்பற்றி-ஆங்காரம், ஆங்காரத்தைப் பற்றிச்-சித்தம், சித்தத்தைப்பற்றிச்-சீவன், சிவனைப்பற்றிச்-சிவம், இப்படி யறியவைப்பாயாக. அறியவைக்கிறவன் யார்?

"அவனருளாலே யவன்றாள்வணங்கி"—என்பதே சித்தாந்தம். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"வெள்ளநீர்சடையர்போலும் விரும்படியார்க்கெளியர்போலும்
உள்ளதேயுருகிநின்றன்று குவப்பவர்க்கன்பர்போலும்[லும்
கள்ளமேல்வினைகளெல்லாங் கரிசறுத்திடுவர்போலு
மள்ளலாய்படுனைமேய வாலங்காட்டடிகளாமே"—எனவும் வரும். (சுஎ)

தேகவாசனை, லோகவாசனை, சாத்திரவாசனை இந்த மூன்றுக்கும் விபரம்; தேகவாசனை-பூப்பிரதக்கணமுதலிய செய்யவேண்டுமென விருப்பம்; லோகவாசனை-தன்னை யுலகமறிக்க நடித்துப் புகழ்விரும்பி யிகழ்விலக்கல்; சாத்திரவாசனை-அநந்தசாத்திரங்களு மறிவோமென்றல்; தேகவாசனை யாவது-சருவஞ்சிவமயஞ் சகத்து என்கிற விவேகத்தால் நசிக்கும்; லோகவாசனை-அரிகரப்பிரமாதிக ளையும் புகழ் இகழ்விடாதென்பது சித்தாந்தப்பட்டால் நசிக்கும்; சாத்திரவாசனை-ஆத்மக்கியானஞ் சற்குருகடாக்ஷத்தால் அன்றி விளங்காதென்பது, சித்தாந்தப்பட்டால் நசிக்கும்; சாத்திர விருப்பம்-எவனுக்ஞானோடா அவனுக்கு அனுபவங் கொசுக்காலத்தினையாலு மிவ்வி என்பதே சித்தாந்தம். இதற்கு வசனம் உண்டோடா? உண்டு, எப்படி?

"உத்தமமீசுரத்தியானம் மத்திமமாகமசாத்திரமோ
கோகனிட்டங்கீதாகாயா வாதார்த்தம்பசுலட்சனம்"
—எனவும் வரும்.

(சுஅ)

ஆத்மா-குருடன், குருடி-ஆணவம், கோல்-சரீரம், கோல் கொடுத்திழுப்பான்-ஆசாரியன், சூரியன்-சிவம், படுகுழி-நரகம், மேடு-சுவர்க்கம், கோயிலுக்கிழுத்தால்-கொளத்துக்குப்போவெனன்பதே சிவபோதம், (அரவானிருந்தறுக்குது-ஆனிருந்தாலாவுது) என்னும் வசனத்தால் ஈசுரன் உண்டு; அவனால், சகசாலமுண்டென்பதே சித்தாந்தம்; (எங்குஞ் சிதம்பரம்-பொங்கிவழியுது) என்னும் வசனத்தால், அகமுகமாயிதேரர்க்கு அக்கணமே பந்தபாசங்களும் விடுபடும். இதற்கு வசனம் உண்டோடா? உண்டு, எப்படி?

"இருட்டறைமூலை யிருந்தகுமரி
குருட்டுக்கிழவனைக் கூடல்குறித்துக்
குருட்டுனைதீக்ஷிக் குணம்பலகாட்டி
மருட்டியவனை மணம்புணர்ந்தாளே"—எனவும் வரும்.

சூரியனுக்குள்ளே-மேகம், மின்னல், இடி, இந்திரதனுசு, மழை முதலிய அஞ்சுந் தோன்றிறற்போலச் சருவசூனியசிவத்தில் ஆணவம், மாயை, கன்மம், மகாமாயை, திரோதாயி அஞ்சுமலமுந் தோன்றியவாறுகாண்க. சிருட்டிகாலத்திற் றோன்றிச் சங்காரகாலத்திற் சிவனிடத்தெப்படி இல்லாதேபோம்? கார்காலத்திற் சூரியனிடத்திலே தோன்றிய-அஞ்சுங் கோடையில் மறைந்துபோனது சூரியனிடத்திலேயே யென்பதே சித்தாந்தம். இதற்கு வசனம் உண்டோடா? உண்டு, எப்படி?

"சோற்றுவதெல்லா மின்னிடத்சோற்றும்
சோற்றம்பிரிந்தி மேற்றுச்சுடர்முனே"—என்ம,

"மன்னுமாலையமேனி வாணும்னைவயமும்
பின்னைமுமடினைமும் பெருகிச்சிவணும்
பன்னுமானைவமுதற் பாசமியானைவயு
முன்னுமிச்சிவத்தினை டயுதித்தெகாங்குமால்"—

எனவும் வரும். (ஙo)

சோற்றமுமொக்கமுஞ் சிவத்திலே கூடாதென்று சிவாகமஞ் சொல்லுமேயென்னில், நீ ஆகமக்கைகண்டால் முற்றுந் தெரியும்; ஆஃதெங்ஙனம்? அங்ஙனம் பூர்வகாண்டத்திற் சொல்லும்; உத்தர காண்டத்தில் வைதற் சொன்னபடியே சிவத்திலே உம்பத்திலயஞ் சொல்லும்; மாயையிலே உம்பத்திலயமென்னில்,

"ஏழுபாரழுகட லிபங்களெட்டுவெற்புடன்
சூழும்வானகிரிதாடங்கித் சூழுமேழுலகமும்
வாழுமால்விசும்பிறை பிரமவண்டம்யானையு
மூழியாளெனிக்குளே யுதித்துநின்றொருங்குமே"—

என்றும், வசனம்வரக் கணக்கில்லை; சர்வ பரிபூரணர், சர்வ காரணர், சர்வலோகநாயகர், சர்வசிவதயாபரர், சர்வகாரியகாரணர், சர்வஞானகாரணர், சர்வதேவசிகாமணி என்று சிவத்துக்கு நாமம் வரக் கணக்கில்லை. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"தினைதுணைகுமிழுமியல்லாந் தினைகடற்றோன்றுமாபோ
லுனையுயிர்மாயையாதிக்கை யுனைதிடமுதிக்கக்கண்டேன்
பனைதிருவுருவுமாகிப் பசுத்தொறுக்குழியிருந்த
திருமறுமாய்பன்றோற்றுந் திருப்புலிவனத்துளானே"—

எனவும் வரும். (ஙக)

சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மயேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரமா, இந்த நவசத்தபேதமுஞ் சிவபேதமுஞ் சத்திபேதமுமாம். சரீரபேதமெல்லாஞ் சத்தி; ஜீவபேதமெல்லாஞ் சிவம் என்று, திவ்வியாகமஞ் சொல்லும்; அதற்குமுன்னே வேதமுஞ்சுமும். இந்தவேதாகமக் கண்கள்பெற்ற நாதாக்களுஞ்

"சத்தியாலுதும்முடற்றயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளிதற்குமேம்பிதற்றலாவதில்லையே"—என்று,

சொல்லியிருக்கிறார்கள். எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்தோறும் பிறந்திறக்கிறவன் இவன் சிவனேவாறே ? சிவனுக்கு உற்பத்தி லயமில்லையென்று சிவாகமஞ் சொல்லும் ; ஆதற் கென்னை மரண மாருக்கென்னில், மனுஷ்யத்தன்மை ஆகமசித்தாந்தம் ; இது எப்பேதசொல்லியிருக்குதென்னில், சர்வக்ஞியானேத்தி தந்திரஞ்சிந் யாகமத்திலுங்காண்க. இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"தேகமாதுமையாள்கூறு சிவனின்கூறதான
லாகமாய்ப்பிறந்திறப்ப தாவனவனேயலாமே
லாகனவிடபதூர்தி மனமெனவறிந்துதெளன்டேன்
மேகவாலயத்தைகீங்காத் திருப்புலிவனத்துளானே"—

எனவும் வரும்.

(நஉ)

அறுதியிலே பாசம் பசுவை யெவ்வண்ணம்வந்து பற்றிக்கொண்டது ?

"மால்கொடுத்தாவினைவத்தார் மாமனறக்கூடினோ"—

என்பதனால், அறுதியிலே சுசரசங்கற்பத்தை யுன்பொய்ப்போதத்தால் அறியப்படாதே என்னில், ஒருபரிகாரம் பரிகண்ட குழந்தைக்கு விகாரமுமுண்டானற்போல அறுதியிலேமலம்வந்து பொருந்திற்றென்னில், ஆத்மாநிர்வயமே அனைவயமே வென்றுரைத்த சங்கைவருஞ். சந்திரனிடத்திலே யிருக்கிற களங்கத்தை முயலென்றும், மானென்றும், ஆலவிருட்சமென்றும், பூமிச்சாயையென்றும் பலவாய்ச்சொல்லுவதன்றிப் பிரத்தியட்சமே பிடிபடாமல் மயங்குமென்னில், அறுதியிலே விளைந்த விருத்தாந்தம், நீ சிவமாய்நின்றுந் தெரியுமன்றிச் சிவனுய் நின்றுபார்க்குமளவுந் தோன்றுதென்பதே சித்தாந்தம். இதற்கு வசனம் உண்டோ ? உண்டு, எப்படி ?

"*அறுதியின்மலம்வந்தெனவோ தியதுதாமதற்குமுன்ன
மறுதிகளிலாதவாறு மலமுடான்மைமந்தன்போலத்
தறுதலின்சத்தியாலே தனுகரணங்கள்வந்து
பிறுதிறிற்பெற்றுப்பின்னர்ப் பிரிந்ததும்பேசல்வேண்டுற்
செறுதிபன்னுழிபட்டேடத்தும் திருப்புலிவனத்துளானே"—

எனவும் வரும்.

(நஊ)

சிவராசி, சிவசம்பந்தமானல் பின்னர்ப் பாசசம்பந்தப்படுமோ ? படாது. பரமமுத்தனனல் பிராரத்தம் அனுபவிக்கிறவன் சுகதுக்க

* இஃது ஐ அடிக்செய்யுள்.

ப்படாதே ? படும் பட்டவனல்ல ; கண்டுங் கண்டவனல்ல ; கேட்டுங்கேட்டவனல்ல ; பார்த்தும் பார்த்தவனல்ல ; உண்டும் உண்டவனல்ல ; மோந்தும் மோந்தவனல்ல ; என்று சர்வக்கியாதீதத்தரஞ் சொல்லும். இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"கடலிலேகலந்தவாறு கதியினடைப்பின்வந்தாலும் [ரு
கடலினுட்டன்னைமருன்றுக் கலைகையனதிலோக்கண்டோ
முடலிடமிருந்துமுன்னை முறைங்கியமுலாவினின்றும்
கிடலுனைடருனியன்றே றிருப்புலிவனத்துளானே"

—எனவும் வரும். (நச)

சிவமும்-சீவன் முத்தர்களும், நூலும்-வாசனையும், மணியும்-ஒளியும், நீரும் - தட்பமும், நெருப்புந்-தூதும்போலுமென்னில் ; இவை இரண்டபடாதோ ? இவைகளென்றுக்ரூரிய வுவமைகளென்பதே சித்தாந்தம். ஒன்றென்பதும் விளக்கையென்னில்,

"இரண்டபட்டதிரிற் குரங்குங்குடியிரா"—என்றும்,

"மதியுங்கதிருமென்ற பட்டதமாலவாகிய டுன்னியதினம்"

—என்றும்,

"கன்டனைங்கண்டியுங் கலந்தான்றபட்டார்"—

என்றுஞ்சொல்லுகின்ற இக்கவசனங்களெல்லாம் விலக்கு; ஆனால், அனுபவத்தில் ஒன்றென்ற அனுபவமும் விலக்காம். அனுபவத்துக்கெல்லாம் ஒன்றென்பதே சருவமதசம்மதம். இதுதர்க்கத்துக்கடாது. இதற்கு வசனமுண்டோ ? உண்டு, எப்படி ?

"ஒன்றுபுலகினைத்து மானர்தாமே
யூறிதேனாறுபி யுபசரித்தாரதாமே"—என்றும்,

"ஒன்றுபுலகினைத்து மானையென்றப்பலுனி
பொன்றுமொழியாற் புகன்றிருக்கப்-பொன்றுத
முத்தியிலு முன்முதலு முண்டென்றனைத்தலைவன்
பித்தமுறுத்தை சையாதீ தே"—என்றும்,

"ஒன்றிரண்டல்லதென்றுஞ் சொன்றினே யொன்றும்பற்றி
நன்றுதீதென்னுநிற்குந் நானிகளுள்ளக்கோயி
லென்றுநிற்கினியதென்றேறுவினடவிடாதிருந்தெம்மான்
சென்றனடையாதசெல்வத் திருப்புலிவனத்துளானே"—

எனவும் வரும். (நந)

பஞ்சபாசங்களும் பஞ்சஞானங்களாற்றனிக்கனி கீங்கும்; பஞ்சகிருத்தியமாவது சொற்சொரூபம், பரசொரூபம், புருடார்த்தசொரூபம், உபாயசொரூபம், விடோதிசொரூபம். சிவதூலடையதாயதி சிவகாமி என்றாற்போல, ஆத்மாவுக்கு ஆத்மதாயதி யென்றுண்டானது. அது சிவத்தோடு கலந்தபோதும் உண்டோ? என்னில், அப்போது அவனே யிவனும், அவனே யிவனுமாம். அது என்போலவென்னில், சந்திரனும், சந்திரிகையும், அமாவாசியிற் சூரியனேடொன்றி அது இதுவாய் நிற்றல் போலவென்றறி. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"பாசத்தூய்மைபோதத்தேதாகிம் பதித்திடப்பசுவாய்நின்பாசம்
காசற்றவிரியாய்போலவ்கலந்துநின்றிநில்லை
யாசற்றதீயும்காணு மன்னியபரிசினமையாலே
தேசத்தாற்பரவலான திருப்பரிவினத்துளானே"—என-ம்,

"சண்டியமாயாவிருள்கெட வெப்பொருளும்விளங்கத்
தண்டியதேசாதினையாதீனவனுக்கு சொல்லவல்லனல்லன்"—
எனவும் வரும். (இசு)

ஒருமனிதன், பரமசிவ சொரூபமாவது அதிசயமன்றியடாதே? அகமந்த சொன்றால் உனக்கேதன் சமீபமும்; ஆகமமே, சிவன்சிவ சிவன்சிவ ஆண்டவனடிமைக் கழுவுவாரார்தென்று சொல்லுமே. அதுவெல்லாம் பூர்வகாண்டம்; உத்தரகாண்டத்திற் சொல்லுகிறதைச் சொல்லுகிறேன் கேள். ஒரு குளவியாற் கிடத்தப்பட்ட கிடத்தவும்போய்க் குளவிசித்தனை முற்றுமுற்றக் குளவியான தன்மையும், ஒரு பாடானைந்து சிற்பனால் வைதாங்கப்படி செய்யத் தெய்வமான தன்மையும், ஒருவிழல் ஆறு தமாவாசிப் பிடிங்கிப்பிடிங்கி நட வினாமிச்சியான தன்மையும்போல,

"சிவன்தீக்ஷையாலுந்சிவதானத்தாலும் சிவமாவன்"—
என்று,

சர்வக்ரியாசரியாதரம், தேவிகாலோத்தரம், வாதுளாகமமுதலியனவைசித்தாந்தப்படுத்தும்; ஆகையால், பூர்வகாண்டம் பொருளல்ல; பொருளென்னில்-உனக்குறுபவுகாலுந் சமீபமில்லையென்பது வாதம் தரியும். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"கிட்படுகிடாகல்ல கேழ்கிளர்குளவியாலே
யாட்படவதுகாணை தசியம்போலுமம்ம

நாட்படப்பிணிக்குகாயே னைதனிக்கடலெய்துத்துயர்
கேட்படச்சிவமதுதானேன்ற நிருப்படலினைத்துளைசீனே"—

[ரசிய,

"பக்ஷசமன்டொதுப்பிலே டுறுப்பிடைதிக்குசீலை சிலை
னிக்குலும்பிலோர்திட நிலோர்தலைவ்வைமாயிலம்
பக்ஷசமன்வலிருந்திடப் பறம்புதுளைப்பிடாயிலம்
பிச்சர்காளகிங்கிலீர் பிரமனிருந்துசீலைபோ"—எனவரும்.

(கூ)

இவன்முத்தான் உலகத்தினை கடிதும் கடலைன் எப்படி யிருப்பர் பார்? தாமரையிலையும் தண்ணீரும் போலும் பிணைபோலுறுதியிலாதும், மும்பழமும் நெல்லிபோலும் நிற்பர். அதனை விளக்கையன்றுபோலாகும் நற்குற்றமோ? பிரமர்த்தகன்மம் பொறித்திறமாம்; தெளிவு பொறியின்மென்னில், மாயமாதியாம் முடியும்; மெய்ஞ்ஞான பொறியுமுண்டு னின், மனத்துக்கு வாயும் வயிறு முண்டுபோலன்றும் சாலைமாறும். ஆறற் சிந்தாந்தமெப்படி? தெளிந்தான் பொறியின்றி. பிறப்பு மெ றப்பனடவது மனது. அதெப்படி? முத்தாடி, மூன்று விரல் சுற்றி ரம்பண்ணுறைகயில் கலியாணவம்மத்தற் கண்டாற்போற், பிரமரந்த்ர மிலேசமும் அனடவன். தனக்குமையிற்றி பிறப்பு அது சுத்தாசுத்த வதுபோலவும், ஒரு காரம் திப்பற்றிக்கொண்டு, மூன்று காரம் பிரதி டையன்னி இரண்டுக்குறைந்து சாதிக்கலாகாதபடி, அதனை விளக்குவோம். பிரமரந்த்ர மென்றது; இதற்கு வாசகமுண்டோ? உண்டு, எப்படி?

"பங்கயப்படாசனை யெனும்பொய் பிறப்பறுவர் புதியவன்ன
மங்குலகத்தறுகாலுறும் குறையாதுமனமும்பிளவாகும்
சிங்கமெனவேபிறவுமிந் நிலமேலுள்ளதிறத்தினோர்
லங்குமுறுவர்கதுங்கமறிவிலாமையாலுறுவர்"—கா.

"பங்கயப்படாசனை நிகர் நிற்பிறப்பறுப்பர் புதியவன்ன
சங்கையெனியிற்பிறவுறு முலகநிற்குமுறைபோல்
தங்கமனைப்பிறவுறுமுயிர் முலகநிற்குமுறைபோல்
விங்கினைவதேபரனின்வாழ்வாமெனுரிய்வுபோலுமே"—

எனவும் வரும். (கூ)

இந்தச்சிவஞானத்தைப்பற்றி மனதிலிருத்தி, பாவிக்கியம், காணத்-சிவகாணம், சிவ

சோகம்பாவனை, பூனை-சமதரிசனம், அநாட்டானஞ்-சிவோகம், சந்தியாவந்தனம்-மகாவாக்கியம், வந்தனைவழிபாடு-தற்பரிசனம், சமாதி-சிவதரிசனம். இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"வடிவிலாவடிவினின்ற மனமிலாத்தகாழில்குயிற்றி
யடிமுடியில்லாதவோரான வாரமூதுவல்விதிற்போர்
படிகுறியதனையபெண்டீர் பாற்றாரியதனையணைமக்கள்
செடியுடையாக்கைகவேண்டார் திருப்புலிவனத்துளாரே"

—எனவும் வரும். (கூக)

சிவாநானிகள் பஞ்சாக்கரத்தின் முத்தியானந்தம் பெற்றிருப்பதெப்படி? என்னில், ஈகாரமாகிய மாயையை நாமல்லவென்றகழுவா மனமூவி, மகாரமாகிய வாணவமலறப்பு நீங்கி, யகாரமாகிய வாத்மதரிசனம்பண்ணி, வகாரமாகிய தாயைக்கண்டு, சிகாரமாகிய பிதாவைத் தாயாற் கண்டுங் காணுமற் சுவாநுபவத்தி லழுந்திநிற்பர்கள். அழுந்தல்வேற்றுமையைக் காட்டாரோதா? என்னில், அழுந்தலென்றது ஒப்பனை. இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"ஈகாரத்தின்மயலிலாநா வாவினனறுக்கிப்பின்னர்
மகாரத்தின்மறப்பனைபோமே மணிபெனமதியால்வாட்டி
வகாரத்தின்வழியேசென்று மாயைனறியாதெங்குநுந்
சிகாரத்தைதக்கண்டோடின்றற் றிருப்புலிவனத்துளாரே"

—என்னும்,

"மந்திரமாவதுமந்தெழுத்தேயத்தமந்திரத்தி
னந்தமிரண்டுமுள்ளடக்கி யிரண்டுடன்வழியனைடத்து
முந்துமிரண்டுடன்வழிபையத் திறந்துயர்முத்திகந்தான்
கந்தன்கணபதிக்கப்பன் கவிக்கச்சியேகம்பனே"—

எனவும் வரும். (கூ0)

சற்போக்கே சிவமாய்த் தானில்லாமையே அதற்கடையாளமாய்க் கண்டமகத்துக்கள், நிருகடனதரிசனங்கண்டிருக்கும் வண்ணஞ் சொல்லில், ஆனந்தழுந்தி கடனத்துக் காடரங்கம் ஆத்மாவாக, ஆத்மா அதிபட்சை உதிபட்சையென்று மிரண்டு கண்களையுமூடி நிர்வாணபதத்தை நினையாமல் நினைப்பதே கடனதரிசனம். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

"சோகமிலாவாக்கைபெற்று நுண்ணறிவுடையராகித்
தாயிறவாவினியதின்சோக் சமாதியிற்கானமாட்டார்

மானையடால்வகுக்கப்பட்ட வடிவினடநின்னைக்கானைச்
சேயராயரற்றுகின்றூர் திருப்புலிவனைத்துளாரே''—
எனவும் வரும். (சுக)

திவஞானியைப் பிரார்த்தம் வாதிக்குமோ? வாதியாதோ? வெகு முகத்தில் வாதிக்கும்; அகமுகத்தில் வாதியாது. அகமுகமானல் வெகுமுகம்வருமோ? அதுதான் பிரார்த்தவாசனை. இந்த வாசனை கிருஷ்ணர், ராமர், சுகர், வாமதேவர், காந்தி, பிருங்கி, வசிட்டர், வான்மீகி இவர்களிடத்திலுக்காண்க. இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

''வனைமத்தபடியெல்லா மனுபவிப்பதன்றியே
யுனைமக்குரியேயாலு மொழிக்கமுடியாவே''—என்ம,

''ஆறியாலு மயலுமறிகிலா
வேனைமடங்கலோ யன்றியிருநிலத்
தானைமலென்றவு ருண்கதகாலோசெலாய்
மானைமோன்ற டலர்ந்துளதாமரே''—என்ம,

''தனலொகலைவாராயின் சார்தராவினையிரண்டும்
தனலொகலைத்தலோலை சார்தருமினையிரண்டு
மனமொழிகாயமூன்ற மவனைமுத்தினாயினிற்பச்
சினமயலகன்றேரார்போற்றும் திருப்புலிவனைத்துளாரே''
—எனவும் வரும். (சுஉ)

சிவயோகிகன் சிவாலயதரிசனம், குருதரிசனம், சங்கமதரிசனம், செய்வாரோ? சிவனை ஆலயமாகவும், சிவமே குருவாகவும், அறிவே டனைகவும் தரிசிப்பர்; தன்னைச் சிவாகாரமாவதே சங்கமமாகவுந் தரிசிப்பர்; சிவாலயமாகவுந் தரிசிப்பர்; இப்படி மூவகைப்படுமோ? என்னில், உபசாரமன்றிச் சுபாவத்தில் ஒன்றேயாம். இதற்கு வசனமுண்டோ? உண்டு, எப்படி?

''குறியறிவாகுங்கோயில் குறிப்பருமாவியாகு
மறிவுசங்கமமேமெல்லா மறிவெனக்கண்டுகொண்டேடன்
றறியெனவுடலுங்கண்ணுற்ற சமாதியிலிருக்குங்காலச்
செறிபவமினியெற்குண்டோ திருப்புலிவனைத்துளாரே'
—எனவும் வரும். (சுக)

சிவயோகிகள் சிவதரிசனம் பண்ணுவாரோ? பண்ணினின், மன வாக்குக்காயம் அசையாதோ? அசைந்து மசையாத நிலையிலிருப்பர். போகம்-போக்கியம், சாமி-சாமியம், சாக்தி-சாக்தியம், இரண்டுவகுப் புமின்றி நித்தியானந்த துரியத்தில் தேகபரியந்தம் வரவும்போக்கு மிருக்கும்; ஜீவகயாவ், வழிபடுதேவானைக்குறித்துச் சினகரமே தேக மென்றும், சிவமே தாமென்றும் நினைப்புள்ளமட்டும் நினைப்பர். பஞ்ச பாசங்களுக்குந் சாட்சிகாயகர் காமானபடியால், அந்த அனைந்தானந் தத்தை என்னென்று சொல்லுகேன். கடைசாரஞ் சிவாத்மாவே பர மாத்மா; பரமாத்மாவே சிவமாஞற் சைவசித்தாந்தம் ஒப்புக்கொள் ளுமோ? பூர்வகாண்டத்திற்குத் தள்ளுபடி; உத்தரகாண்டத்திற்குச் சம்மதம். இதற்கு வசனம் உண்டோ? உண்டு, எப்படி?

"வானகமன்னைகம் வலைக்குநிரியிணை
நானிகள்வாய்மொழி காம்பலகேட்டிணங்
தானெனிவமலோற் றனிச்சிவம்வெறிலை
மோனநிலையிதுக் மகயழுழுட்டுமே"—எ-ம்,

"மசவசித்தாந்தமெல்லோர் தானவனுகிற்றல்
மையறுவேதாந்தித்த மற்றதுகானெயென்ன [லாபகுந்
லுய்வகைக்கிரண்டுமென்பதென் சிறுதியென்னுயிர்க்கி
செய்தசற்குரவனீயே திருப்படிவனைத்துளாரென்"—
—எனவும் வரும்.

(சுசு)

இந்த அறுபத்துநாலு சங்கையும், அறுபத்துநாலு கலைக்கியானமும் இதற்கு யோக்கியம்; நிருவாணதீட்சைபெற்ற சத்துக்கள் இதனுள் பஞ்ச பாசத்தினிற்றும் விடுபடுவர்.

சிவயோகிவாக்கு நான்மறைவேதம்,

அறுபத்துநாலுசங்கை - முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

வள்ளலாச்சாத்திரம்.

பதினைந்தாவது

தசவழக்குச்சிற்றவினை.

சிற்தனையென்பது, ஆகமவாக்கியங்களாயுள்ளவை. அஃதெதற்கானை ? எகசிற்கானை, துவிகசிற்கானை என்றிருவிதம். அதில், துவிகசிற்கானை யொழிப்பான்பொருட்டு எகசிற்கானை வற்னவாம். இதற்குச் சாமியம் ;

"சிற்தனையைத்தற்தென்னைச் சிவமாக்கியாண்டானை
சிற்திக்கச்சிற்திக்கத் தர்ப்பனத்தைகவினைக்க
வற்திடுமவ்வொளிபோல மருவியரனுளத்தே
வரவரவற்திடுவன் பின்மலமானதுறுமே"

பிரகமற் திருமேனிகாண்டவழக்கு.

சிவனுக்குத் திருமேனியில்லை ; எங்ஙனம் ? என்னில், ஆகாசமே பிர்மத்துக்குச் சரீரமென்று வேதற்குசொல்லும். அஃதன்றியும், அனைதி தொடற்து இற்றை வனையுற் சிவனுருவமாய் வரக்கண்டோமில்லை. ஆனல், அட்டமூர்த்தி, அண்ணுமலை யென்பதும், மற்திரசொரூபி யென்பதும் பொய்யோ ? என்னில், அஃதெல்லாம் தியானமாத்திர மன்றிப் பயன்படாதேயென்னில். உன்னைப்போலக் கண்டிதப்பட்டு மலசரீரியாய்க் காமாதிகுற்றங்களோடுங் கூடநின்றால், அப்போதிவன் தான் சிவனென்றறிவை ; இந்த அறிவையாதோ உனக்குப் போதித்த வர் ! அவரே குருட்டுக்குரு, நீயே குருட்டுச்சீடன் போதாய் ! இந்த வழமதியாலேயன்றோ பிறந்திறந்தாய் ; ஆகையாற் சிவனுக்குத்திரு மேனி யுண்டென்பதே சித்தாந்தம். சாமியம் ;

"அருளேதிருமேனி யான்மாத்திருமேனி
குருவேதிருமேனிக் ளெகள்"—

"அறிவுக்கறிவா யறிவிப்பான்சில்லோர்க்
கறிவுருவுகொண் டருளுவான்
எங்குமிலையென்பா ரிதயந்தொறுமறிவா
யெங்குமிருப்பா னெம்மிறை"—

(காதவித்துகளாதீத நமோநமஃ வேதமந்திரசொரூபாய நமோநமஃ)
என்னுந் திருவாக்குகளா லறியக்கடவாய்.

துவிதநிலை யுயிர்வழக்கு.

சிவனுக்குத் திருமேனியுண்டாகில், இந்தச் சிவனேயன்றி ஆத்மாக்களில்லை ; எங்ஙனம் ? என்னில், சருவவேதாகமங்களோடாறுமாய் நின்று உண்ணல் உதித்தல்முதலிய காரியாங்களைச் சிவனே செய்வன். அன்றியும்சுருதி "சரீரபின்னம், பரமாத்மனேகம்" என்றுசொன்னலையால் ஆத்மா நாத்தி ; ஆனல், உன்பெயர் மாயாவாதியோ ! அனீச்சுரவாதியோ ! இருபெயரும் உனக்கே சரும் ; இந்தச்சொல்லை மதியாலேயன்றே,

"மாயாவாதமெனுங் கன்மேகமாருதஞ் சூழ்ந்தழித்தார்க்கு" —என்று,

மாணிக்கவாசகரால் தூற்றப்பட்டாய், மதிகேடனே ! உயிருண்டு நாசகொர்க்கஞ் சிவனுக்கோ ? சிவனுக்கோ ? சிவனுக்கே ஆனற் சிவனெங்கே ? நீதான். என்றுக்கெனக்குண்டோ விஸ்வாலோயா ? என்னில், உண்டில்லையென்பதே நாக்கென் றறிந்தாற்போலச் சிவனேயறிவாய். மூடனைச் சிவாத்மாவென்றும், விவேகியைப் பரமாத்மாவென்றும், சொல்லுகையாலும் சிவனுண்டு. கருவிலேயாவுக்கூடனேத உயிர்க்குப்பிறப்பு ; கருவிலைப் பிரிந்தபோத உயிர்க்கிறப்பென்ற றறி ; சரசிலேமயிருண்டானதுபோல, நாபன்மார் உள்ளத்திலே உயிருண்டென்று மதிக்கப்பட்டது. உள்ளங்கையிலே மயிர் கொத்துக்கொத்தாய் முளைக்கிறதுபோல, உன்னறிவிலே உயிரில்லையென்று மதிக்கப்பட்டது. உன்கண்ணறி யுடையமைக்கேற்கக் கழறினோ. கோட்டான் சூரியனில்லையென்றால் ஆர்தானெறைப்புக்கொள்வார் ; இதற்குத்தாமியம்,

"ஊடமெனைளியில்லையெனி னெறைப்படலாகாதுதாடா
லேமவுயிரின்றென்பாரில் உலகுவருதலானுமுரு
தோன்றிநின்றழி முத்தொழிலுளதுணரும் [சுட்டாயத்
சிவனுண்டவுணரும் சிவனுருண்டாங்
கறிவினேமறைக்கு மவிச்சையுமுளதே
உடலிழந்தழுதீரோ உயிரிழந்தழுதீரோ [ங்கண்டீ
உடலிழந்தழுதீராகில் உடனவனையன்றுங்கண்டீ நின்றறி
ருயிரிழந்தழுதீராகி யுயிர்தானையன்றுங்காணீ நின்றுங்
[காணீர்" —என்பும்,

"இல்லையுயிரென்றுனைக்கு டுனைக்குளிருக்குமுயிர்
தொல்லையுயிரிலையென்பவனே யுயிர்தான்றிடவு
நல்லமலர்மனம்போலுயிர் நாதனுகனென்றுமென்றுரான்
கல்லிற்புறப்பட்ட கையுடையான்கச்சியேகம்பனே"—

(உளதிலதென்றலியத்திரதனுவினானம) என்றுந் திருவாக்கால் அறியக்கடவாய்.

நிரதிகையாணவவழக்கு.

ஆத்மாவுண்டு; ஆத்மாவைப் பஞ்சபாசத்தி லாணவமலமறக்கு மென்பது கூடாது. என் கூடாது? ஆத்மா சுயம்ஜோதி, அகரீரி, அழமி, அவிகாரி, நிரமயன், அகண்டாகண்டன்; ஆகையாலாணவ மலமா யாது. உன் பெயர் அகம்பிரமவாதியென்றையர்தேசர் சொல்லுவர்; கெடுவாய்? பிரமன், நான் பிரமமென்று பட்டபாடும், புருடோத்தமன், நான் பிரமமென்று பட்டபாடும், புராணங்களிற் கேட்டறிந்தாயில்லையோ! ஆகையால், உன்கருமமே கட்டளைக்கல்லாயிற்று. போதாய்! இந்த மதியைக்கொண்டுன்பிழைத்தாய்! இத்தனைகோரணிக் கிடங்கொடுத்தநீ அருந்தானம்! குழந்தையைப் பராக்குச் செய்வதுபோல, நாடோறு முன்னை விடயப்பராக்குச் செய்வதானவம்; அன்றியும், (உன்றனைக்குக்கதிவந்திலையோ; வென்னுமவையச்சொல்லாறு மறியக்கடவாய்; இதற்குச் சாமியம்,

"அன்னியத்தையுய்காட்டிய நன்னியத்தைநத்தான்
மறைக்குமென்னே மலத்தினியல்"—

அன்னியமானவற்றையுணர்த்தி யன்னியமாய் நிறைந்த வறிவதியாமையாணும் மலமிலை மாயை மறைக்குமென்னில்,

"மலருணமறைத்தல் மாயையினாக்க
லுளடுக்கெனவங்கிய வரனின்வாலுள
திலையிலையென்னல் சுவலைச்சொல்லே"—

ஆனல், இந்த மலம் அறதியோ? ஆதியோ? அறதியென்னில் நீங்காது. ஆதியென்னின் நீங்கிப் பின்னுமாவரிக்கும். பாலுக்கு வெண்மையும், காரிக்குக் கறுப்பும் இயற்கை. சுக்கிலாம்பரத்துக்கு அழுக்கேறல்செய்கை; ஆனல், இந்த இருதலைக்கொள்ளிக் கிடைப்பட்டயான் போம்வழி, பன்னிரண்டுவருடங் குருக்கிடை.

சதுர்த்தி மாயைவழக்கு.

மாயையேயில்லை; எவ்வாற்றானில்லை? சருவம்பிரமமயமென்று சுருதிசொல்லும்; அதன்றியுங் காணப்படுவன, கேட்கப்படுவன, உண்

பன, உடுப்பன, கலியாண, நிரியாண முதலியவெல்லாம் பிரமமென்று என்னலுபவத்துக்கே யொக்கும்போலும்; ஆயின்முன்னே ஒரு சர்வ சீவதயாபரக்கொக்கு நாமமாத்திரஞ் சிறப்ப, வரி, குளம், மடிக்கள், குட்டையிலுள்ள மீனெல்லாந் துய்த்த கதையை விளக்க, நீயும் அவி காரவாதிப் பட்டங்கட்டிக்கொண்டு, கிருட்டினவிலாசபுத்தகத்தைக் கைப்பிடித்து, மேலுந் சர்வாதமாக்களும் போம்வழி தூர்த்தனை. மாயையிலே அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறதும் வனிதையருபத்தைக் கிலே சிங்குவைப்படுவதும் உனக்கேதெரியும். மத்திமப்பேதாய்! தற் போதச் சிவன் மற்ற நாதாக்கள் அனுபவரிலையை யறியாது பிதற்று கின்றனை. உன் கருமமே கட்டோக்கல்லாயிற்று. சாமியம்,

"ஒருமலைமுழக்கு மிருவினைத்தொகுகு
மும்மலச்செருக்கு நால்விதவாக்கு
மைவகைப்புலனு மாறுவகைக்குற்றமு
மற்றுலன்றி யறிவாகாயே"—என்ம்,

"மாயையேயுடலுமாகும் யானையுமாயையாமே"—என்ம்,

"ஆசையாவிந்தமாயை யறிவினோடுமுழுதாலுழுது
தேகமேயான்மாவென்றகு சேயினைமடவார்தங்கள்
போகமேமோக்கமென்றும் புந்நியத்தினிடபன்னலுற்
சோகம்பாவனையாயிந்தைதும் தொலைப்பர்கள் சிவன்முத்தர்"

என்னுங் கிருவாக்காலு மாயையுண்டென்றறி. இந்த மாயை அறிவை மறைக்குமன்றி விளக்காதென்னில்,

"ஆனைவந்தி லேகிடங்கு வாருயிர்க்குக் காயமெனைய்
தோனைவிளக் களித்து தோமாதேனை-யானைவழு
மாக்கையும்வைய் தென்னைநிக மல்லற் படுத்தாமற்
சாக்கிரா தீதத்தைத் தா"—

என்னுங் கிருவாக்காற்றெளி. ஆகிலிந்த மாயையெங்கே பிறந்தது? என்னில், மனதிலே பிறந்தது. அந்த மனதெங்கே பிறந்தது? என்னில், வியாழவட்டங் குருக்ஷை.

பஞ்சமி கன்மவழக்கு.

கன்மமே கர்த்தா; கர்த்தாவொருவன், வேறன்பதில்லை. பிற க்கப்பண்ணுவதுங்கன்மமே, பாலவியளவனவிருத்தம் நோய் சாக்காடு முதலியன பண்ணுவதுங்கன்மமே. இக்கக் கன்மத் தலையொத்தகால

த்தில் கன்மமே முத்தியைக்கொடுக்கும். இந்த கன்மநுட்பந் தெரி யாதவர் கர்த்தா கன்மக்கயிற்றிலே யாட்டுவிப்பானென்பர்; ஆயின் உன்பெயர் கர்மவாதியென்றும், காலவாதி சகாதரனென்றும், கேட் டிருப்போம் பேதாய்! இந்த வஞ்சமதியைக்கொண்டல்லோ அனேக காலம்பிறப்பை வளர்த்தாய்! தெரிந்தும் தெரியாதவன், கற்றறிமோ ழிதீயே, கங்ஙகையை யடித்தும் கழியிடைமுழுக்கு குனைத்தவன்,

"அறம்பாவமென்னு மருங்கயிற்றும்பட்டி"—

என்னுந் சுருதிதெரிந்தும் தெரியாதனதி விளக்கைப்பிடித்துக் கிணற் றிடை வீழ்பவனீயே, உனக்கொப்பு வாரிபுடைசூழ்ந்த வையகத்து ளில்லை. கெடுவாய்? பூர்வசன்மத்திற்செய்த விருட்டும் வெறுப்பும் சடமாகையாலும், அதை யுனக்கு குசிக்கப்பண்ணிப் பொசிப்பிக்கி றவோ கர்த்தா. எனக்குக் கன்மமில்லையோ கர்த்தாவில்லையோ வென் னும் வழக்கச்சொல்லாற்றளி. ஆனலந்தக் கன்மஞ் சாகாரமோ? நிராகாரமோ? என்னில், சாமியம்,

"அருவாயவல்வினைதோ யடையாவென்னை
மாவடிதுன்றுறை யுறையுமமரதோதே"—

என்னுந் திருவாக்காற்றளி. கன்மத்துக்குச் சடமுஞ் செயலு முண்டோ? என்னில், சாமியம்,

"கன்மமம்வியாதிகடம்போற் சடமன்று
சென்மிக்கப்பண்ணுஞ் செயல்"—

ஆனலிந்த கன்மம் நாசமடையுமோ? நித்தியமடையுமோ? என் னில், சாமியம்,

"மாயப்பிறப்பறுத் தானென்னடானெனல்வல்வினையின்
வாயிற்பொடியட்டிப் பூவல்லிகாய்யாமோ"—என்,

"ஊழாய வுடம்புன்ன வுடம்பாலிங் கூழுன்று
காழுஞ் வினையாற் சகுமுன்று-காழ்கொண்ட
வித்துமா மும்போல வீயா தொருக்கால
முத்தியிலே வீயு முவ"—என்,

"சுந்தந் திருநோக்காற்போமம் பிராரத்தங் கணலோடேகும்
விருஞ்சுமாகாமியங்கள் விளங்கனுபவத்தால்வீயும்
செருஞ்சயான்செய்தலொருஞ் சிவன்செய்தன்றேதறி
மருஞ்சனவினைத் திறங்கள் வந்துனச்சந்தியாவே"—என்,

"முன்னை வருவினை யெல்லாந் தின்மூக்கினாகொண் டெரித்தேன், பின்னை வருவினை யெல்லா மருளிற்பிரித்தவிட்டேன், றின்னுடம்வினை யினை யெல்லாந் சிவார்ப்பணஞ் செய்தொழித்தே, னின்னமெனைக்குப் பிறப்புமுண்டோகச்சியேகம்பனே"

இக்கருத்தா ஞசமடையுமென்பதெரித்தாக்கம். ஆயின், இக்கக் கன்மம் ஆதியோ? அனாதியோ? என்னில், குருக்கினை. கன்மத்துக்குப் பிறப்பிறப்பெங்கே? என்னின், உன்னவுடலத்திற் றோன்றியுமன்றி, நிருவசனம் வசனத்துக் கெட்டாதென்றறி. கன்மம் நினைத்தாலுந் தின்டிறலுந் தொழிலினாலும் வரும்,

"உன்னலொருகால் பின்னினைத்தலிருகாலை தனைத்
துன்னன்முக்காலொன்றே தொழில்"—

